# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஐந்தாம் கட்டமாக திருவள்ளூரில் பரப்புரையைத் தொடங்குகிறார்!



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **13.04.2026 (திங்கட்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **திருவள்ளூர்** - மருத்துவக் கல்லூரி சாலை (பொதுக்கூட்டம்) | திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருத்தணி, பூவிருந்தவல்லி, ஆவடி |
| மாலை 7 மணி | **ராணிப்பேட்டை** - அம்மூர் ரோடு (பொதுக்கூட்டம்) | ராணிப்பேட்டை, அரக்கோணம், சோளிங்கர், ஆற்காடு |
| **14.04.2026 (செவ்வாய்க் கிழமை)** | | |
| மாலை 5 மணி | **வேலூர்** (பொதுக்கூட்டம்) | வேலூர், காட்பாடி, அணைகட்டு, கீழ்வைத்தியநாதன்குப்பம், குடியாத்தம் |
| மாலை 7 மணி | **திருப்பத்தூர்** - மண்டலவாடி மைதானம் (பொதுக்கூட்டம்) | திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை |
| **15.04.2026 (புதன் கிழமை)** | | |
| மாலை 5 மணி | **காரிமங்கலம்** - பெரியாம்பட்டி (பொதுக்கூட்டம்) | பாலக்கோடு, பென்னாகரம், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் |
| மாலை 7 மணி | **சேலம்** - தேசிய நெடுஞ்சாலை, சீலநாயக்கன்பட்டி (பொதுக்கூட்டம்) | சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி |
| **16.04.2026 (வியாழக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | **நாமக்கல்** - பொம்மு குட்டைமேடு (பொதுக்கூட்டம்) | நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு |
| மாலை 7 மணி | **பெரம்பலூர்** - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்) | பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் |

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் :11.04.2026